## முதலாம் உலகப் போர் 1914 — 1918


முதலாம் உலகப்போர் தோன்றுவதற்குப் பல்வேறு காரணிகள் துணை நின்றுள்ளன. ஆபிரிக்க நாடான மொரோக்கோவைக் கைப்பற்றப் பிரான்சும் ஜேர்மனியும் கொண்டிருந்த பேரவா ஒரு காரணமாகும். ஜேர்மனியில் மக்கள் தொகை பெருகிக் கொண்டு போனதால், புதிய குடியேற்றங்களை ஆபிரிக்காவில் பெறுவதற்கு ஜேர்மனி விரும்பியது. ஆனல், ஆபிரிக்காவில் ஜேர்மனிக்கு இடம் கொடுக்க, பிரான்சும் பிரித்தானியாவும் மறுத்தன. ஜேர்மனி மொரோக்கோவை கைப்பற்ற முயன்றபோது, பிரித்தானியா பிரான்சிற்கு நேர்முகமாக உதவி செய்ததினல், கசப்புற்ற ஜேர்மனி, பிரான்சையும் பிரித்தானியாவையும் ஒடுக்கத் திட்டமிட்டது. அதனல் ஜேர்மனி தன் பொருளாதாரத்தையும் படைப்பலத்தையும் பெருக்குவதில் தீவிரமாக முனைத்தது. ஜேர்மனியின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய பிரான்ஸ், ரூஷியாவுடனும் உறவு பூண்டது. பிரான்சும், ரூஷியாவும் தம் படைப்பலத்தைப் பெருக்கத் தொடங்கின.

ஜேர்மனியின் அண்டை நாடான ஆஸ்திரியா, கடற்கரையில்லாத நாடு. அது ஒரு துறைமுகத்தைப் பெற விரும்பி ஈஜியின் கடலில் துறைமுகம் ஒன்றை பிடிக்க விரும்பியது. அந்த எண்ணம் கைகூடாதபடி இதன் அயல் நாடுகளான சேர்பியா, மான்டெனீக்கோ என்ற இரு நாடுகளும் குறுக்கே நின்றன. அதனல் ஆஸ்திரியாவுக்கும் சேர்பியாவிற்கும் இடையில் பகைமை நிலவி வளர்ந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசனை சேர்பியா நாட்டைச் சேர்ந்த ஒருவன் 1914-ஆம் ஆண்டு, யூன் 28-ல் சுட்டுக் கொன்றுவிட்டான். சேர்பியா அரசாங்கமே அவனைத் தூண்டிவிட்டதாக ஆஸ்திரியா குற்றம் சாட்டியது. ஆஸ்திரியா ஜேர்மனியின் அங்கீகாரத்துடன், சேர்பியா மீது படையெடுத்தது. சேர்பியா, ரூஷியாவின் உதவியை நாடியது. ஆஸ்திரியாவுக்கு உதவியாக ஜேர்மனி முன்வந்தது. ஜேர்மனி ரூஷியாவுடன் போர் தொடங்கியது. 1914 யூலை 28-ஆம் திகதி சேர்பியா ஆஸ்திரியா போர் ஆரம்பமானது.

இத் தருணத்தைப் பயன்படுத்தி, பிரான்சைத் தாக்க ஜேர்மனி முயன்றது. அது தன் படையைப் பெல்ஜியத்துக்கூடாக அனுப்பியது. பெல்ஜியத்துக்கு உதவ பிரித்தானியா விரைந்து வந்தது. அது ஜேர்மனியின்மேல் போர் தொடுத்தது. பிரான்சின்






ஐரோப்பிய நாடுகள்

கடற்கரையை ஜேர்மனியின் கடற்படையினின்றும் காக்கப் பிரித்தானியா முன்பே உடன்படிக்கை மூலம் உறுதியளித்திருந்தது. எனவே, ஆகஸ்ட் 4-ம் திகதி பிரித்தானியா ஜேர்மனியுடன் போர் தொடங்கியது.

எனவே இந்நிலையில் ஐரோப்பிய நாடுகள் இரு எதிரணிகளாகப் பிரிந்தனர்; ஐரோப்பாவில் வல்லரசுகளும் அவர்களுடன் சேர்ந்திருந்த சிறு இராச்சியங்களும் சேர்ந்து இரு கட்சிகளாகப் பிரிந்தன. ஒரு அணியினர் மூவர் உடன்படிக்கையினைச் சார்ந்த வல்லரசுகளான ஜேர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி என்பனவாகும். இவற்றுடன் பின்னர் துருக்கி, பல்கேரியா என்பனவும் சேர்ந்து கொண்டன. இவற்றை மத்திய அரசுகள் என்பர். மற்றைய அணியில் நட்புறவு பூண்ட மூன்று வல்லரசுகளான பிரித்தானியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ், ருஷியா என்பன இருந்தன. இவற்றுடன் இத்தாலி, சேர்பியா, பெல்ஜியம், ருமேனியா, கிரீஸ், சீனு, அமெரிக்கா ஆகிய நாடுகள் அணி சேர்ந்து கொண்டன. இவற்றை நேசநாடுகள் என்பர். இவ்விரு எதிரணிகளும் ஒன்றையொன்று கண்டஞ்சின. இப்பயமே போர் மூளக் காரணமாக இருந்தது.

இவ்வாறு வல்லரசுகளுக்கிடையே போர் தொடங்கியதும் விடுதலை வேண்டி நின்ற ஏனைய இராச்சியங்களும், போரின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டலாமென நம்பிய ஏனைய வல்லரசு நாடுகளும் திடீரென போரைத் தொடங்கின. இப்போர் உலகம் முழுவதும் பரவலாக நடைபெறத் தொடங்கியது.

உலகப் போர் தொடங்கியதற்கு உண்மையான காரணம் பெரிய வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஏனையவற்றுடன் கொண்டிருந்த ஆத்திரம், ஒவ்வொரு நாட்டுத் தலைவரும் தாம் சமாதானத்தை விரும்புவதாகவும் ஏனையோர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தப்பான எண்ணம் கொண்டிருந்தமையும், ஒவ்வொரு நாடும் ஏனைய நாடு தன்னுடன் எந்நேரமும் வீணுகப் போர் புரியுமென எண்ணிப் பயந்திருந்தமையும், இரும்புருக்குத் தொழிற்சாலைகள் பெருகியமையால் பெருமளவு படைக்கலங்கள் செய்து குவிக்கப்பட்டமையும், இந்த உற்பத்தியாளர்கள் போரை வரவேற்றமையும், உலக மக்கள் தமது அரசியல் விவகாரங்கள் முழுவதையும் அரசியற் தலைவர்களிடமும், இராஜதந்திரிகளிடமும் ஒப்படைத்து தாம் ஒதுங்கி வாழ்ந்தமையால் இவர்கள் தமது விருப்பத்தின்படி நாட்டை வழிநடத்தியமையும் போர் மூள அடிப்படைக் காரணமாக அமைந்தன.

நேச நாடுகளுக்கும் மத்திய அரசுகளுக்குமிடையே தரையிலும், கடலிலும், வானத்திலும் பல பெரிய போர்கள் நடந்தன. ஜேர்மனி, நீர்மூழ்கிக் கப்பல்களையும், ஆகாய விமானங்களையும் கொண்டு நேச நாடுகளுக்கும் பெருஞ்சேதம் விளைவித்தது. நேச நாடுகள் முதன் முதல் டாங்கிகளைப் பயன்படுத்தின. கடலில் நடந்த போரில் பிரித்தானியரை ஜேர்மனியரால் தோற்கடிக்க முடியவில்லை. ஜேர்மனிய நாசகாரிக் கப்பல்கள் அமெரிக்கரின் கப்பல்களையும் நாசம் செய்து அழித்தன. இதனுல் ஐக்கிய அமெரிக்காவும் 1917-ல் ஜேர்மனியுடன் போர் தொடங்கியது.

அமெரிக்காவிலிருந்த பெருந்தொகையான போர்வீரர் நேச வல்லரசுகளுக்கு உதவியாகப் போரிட அனுப்பப்பட்டனர். நேச வல்லரசுகளை முதலில் எதிர்த்த ஜேர்மனி 1918-ம் ஆண்டு

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை



செப்டம்பர் மாதம் பின்வாங்கத் தொடங்கியது, இம் மாத இறுதியில் பல்கேரியர் சரண்புகுந்தனர். பின் துருக்கியும் போரை நிறுத்தியது. ஆஸ்திரியர் இத்தாலியிடம் தோற்று சரணடைந்தனர். நவம்பர் மாதம் ஜேர்மனிய மாலுமிகளின் புரட்சியால் நேச வல்லரசுகள் இலகுவாக ஜேர்மனிய எல்லைக்குள் பிரவேசித்தன. உடனே ஜேர்மனி போரை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்துப் போரை நிறுத்திக் கொண்டது. இறுதியில் ஜேர்மனி தோற்றது. போர் 1918 நவம்பர் 11-ம் திகதி முடிவுற்றது.

இப் போரினுல் பெருந்தொகையான மக்கள் இறந்தார்கள். இப்போரில் 2 கோடி பேர் மாண்டனர். போர் முடிந்ததும் உலகம் முழுவதும் பரவிய விஷக் காய்ச்சலில் 2 கோடி பேர் இறந்தனர். பல நாடுகளும் நகரங்களும் அழிக்கப்பட்டன. போருக்குப் பயன்படுத்தப்பட்ட வெடி மருந்துகளாலும், அணுக் குண்டுகளாலும் மக்களது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. விஷ வாயுவினுல் பல தொற்று நோய்கள் பரவின. இந்நோய் பரவ பசி, பட்டினியும் காரணமாய் அமைந்தது. கடலிலும், தரையிலும் போர் நடைபெற்றமையால் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும் தடைப்பட்டது. இதனுல் உலக நாடுகள் பலவற்றில் மக்களுக்கு உணவு அளிப்பதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனுல் மக்கள் நோய், பசி பட்டினி என்பவற்ருல் கஷ்டப்பட்டார்கள்.

4795 C.C

உலகில் பல நாடுகளில் போர் நடைபெற்றமையாலும் மக்கள் விவசாயத்தைக் கைவிட்டுப் போரில் ஈடுபட்டமையாலும் உணவுப் பொருட்களின் விளைச்சல் குறைந்து உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பலகைத்தொழில் தொழிற்சாலைகள் போரினுல் அழிக்கப்பட்டதால் மக்கள் வேலையில்லாமல் திண்டாடினூர்கள். இதனுல் நாட்டின் வர்த்தகமும் பாதிக்கப்பட்டது.

வேர்சேயில்ஸ் என்ற நகரத்தில் 1919-ம் ஆண்டு யூன் 28-ம் திகதி போரில் ஈடுபட்ட நாடுகளிடையே உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன் கீழ் ஜேர்மனி படை திரட்டும் உரிமையை இழந்தது. அத்துடன் போரில் கலந்து கொண்ட நேசநாடுகளுக்கு அது நஷ்டஈடு கொடுக்க வேண்டியதாயிற்று. ஜேர்மனியைச் சேர்ந்த சில வளமான இடங்களைப் பிரான்ஸ் பறித்துக் கொண்டது. அத்துடன் நிரந்தர சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகச் ‘சர்வதேச சங்கம்’ அமைக்கப்பட்டது.

உலகம் முழுவதும் சமாதானத்தையும், அமைதியையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக ஜெனீவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படாது தவிர்க்கப்படுகிறது. முதலாம் உலக மகாயுத்தத்தை நிறுத்தும்போது மீண்டும் போர் மூளாதிருப்பதற்காக உலகினுல் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந் நடவடிக்கையால் சுவிச்சலாந்திலுள்ள ஜெனிவாவில் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது. 1922-ம் ஆண்டு சர்வதேச நீதிச்சபை, சர்வதேச தொழிலாளர் சங்கம் என்பன நிறுவப்பட்டன. இச் சங்கங்கள், இரண்டாம் உலகப்போர் 1939-ஆம் ஆண்டில் ஆரம்பித்ததும், ஒழிந்து போயின. ஆனுல் இச்சங்கங்கள் நிலைத்திருந்த காலத்தில் பல நாடுகளிடையே ஏற்பட்ட கலகங்களைச் சமாதானமாகத் தீர்த்தும், தீங்கு விளைவிக்கும் மருந்து வகை வியாபாரத்தைத் தடுக்கும் வழிகளைக் கையாண்டும் பல நன்மைகளைச் செய்தன.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததும் சர்வதேச அமைப்பினைக் கொண்ட ஒரு நிறுவனம் நிறுவப்பட்டது. இது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எனப்பட்டது. சமாதானத்தை மட்டுமல்லாது வறுமையை உலகிலிருந்து அகற்றுவதும் இதன் நோக்கமாகும். இவ்வமைப்பு முறையால் உலக நாடுகளிடையே முன்பு இருந்ததை விட தற்போது பகைமை குறைந்திருக்கிறது எனலாம். எனவே நாடுகளிடையே தோன்றும் போர்களைத் தடுத்து நிறுத்த சகல நாடுகளும் மக்களும் உதவவேண்டும.

# 6 உலக ஒத்துழைப்பு

## ஐக்கிய நாடுகள் தாபனமும் அதன் இணைப்பு நிறுவனங்களும்

உலகத்தில் போர் ஏற்படாமல் தடுத்து, நாடுகளிடையே நட்புறவை வளர்ப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனம் ஐக்கிய நாடுகள் தாபனமாகும். (U N.O.) முதலாம் உலக மகாயுத்தத்தில் பல இலட்சம் மக்கள் மாண்டனர். இனிமேல் அத்தகைய ஒரு யுத்தம் வராமல் தடுக்க வேண்டுமென உலக நாடுகள் கருதின. தகராறுகளைச் சமரசமாகக் தீர்ப்பதே சிறந்த வழி என உணர்ந்தன. இந்நாடுகள் ஒன்று கூடி முதலில் சர்வதேச சங்கம் என்னும் ஓர் அமைப்பை நிறுவின. ஆனுல் இச் சங்கத்தில் அங்கம் வகித்த நாடுகள் அதனை மதிக்காமல் நடந்தன.



அதனுல் விரைவில் அச்சங்கம் செயலிழந்தது. மீண்டும் 1935-ல் இரண்டாம் உலக மகா யுத்தம் ஏற்பட்டு நாசம் விளைந்தது. இத்தகைய இன்னெரு யுத்தம் உலகில் ஏற்படக் கூடாது என உலக நாடுகள் விரும்பின.

இரண்டாம் உலகயுத்தம் முடிவடைவதைக் கண்ட உலக மக்கள் நிரந்தரமான அமைதி நாடுகளில் நிலவச் செய்ய வேண்டுமென்பதற்காக சர்வதேச சங்கம் போன்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவ வேண்டுமென 1944-ம் 1945-ம் ஆண்டுகளிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'பெரு மூவர்' எனப்பெயர் பெற்ற ஜனுதிபதி பிருங்லிங் றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின், பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் ஆகியோர் இந்த ஸ்தாபனத்தை நிறுவ அயராது உழைத்தவர்களாவர். இவர்கள் போர்கள் எழாது தடுக்கவும், தேசங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் ஏற்றதாக இத்தாபனத்தை அமைக்கும் அதே வேளை எல்லா நாடுகளையும் இதில் அங்கத்துவ நாடுகளாக்க முற்பட்டார்கள். தூர கிழக்கில் போர் முடிவடையும் முன்னரே ஐக்கிய நாட்டுச் சாசன நிபந்தனைச் சாசனம் எழுதப்பட்டு 51 அங்கத்துவ தேசங்களின் கையொப்பத்தையும் பெற்றுவிட்டனர். 51 அங்கத்துவ நாடுகளுடன் 1945-ம் ஆண்டு ஒக்டோபர் 24-ம் திகதி இந்த தாபனம் அமைக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

### நோக்கங்கள்

இது சர்வதேச சங்கத்தின் நேர்க்கங்களிலும் பார்க்கக் கூடியளவு பரந்த நோக்கம் கொண்ட புதிய சர்வதேச அமைப்பாகும். இது வெற்றியடைந்த நாடுகளின் ஆதரவுடன் நிறுவப்பட்டது. சமாதானத்தை உலக நாடுகளிடையே பாதுகாப்பது மட்டுமன்றி வறுமையை உலகிலிருந்து அகற்றுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. போர்கள் நாடுகளிடையே எழுவதை தடுக்கும் அதேவேளை போரினுல் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து மக்களைக் காப்பதும், சமாதானமும் பாதுகாப்பும் உலக நாடுகளிடையே நிலையாக நிலவ வழி வகுப்பதும், இதன் அரசியல் சம்பந்தப்பட்ட கொள்கையாகும்.

பொருளாதார முன்னேற்றம் காண்பது இதன் மற்றெரு நோக்கமாகும். உலக நாடுகளின் சமூக முன்னேற்றத்திற்கும், உலக மக்களது வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் வேண்டிய உதவிகளைப் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் மூலம் ஆவன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

